*பிற்பகல் 2-25*

## 6. அரசினர் தீர்மானம்

### விதி 32-ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நாளை 29-9-2005 அன்று வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ 29-9-2005, வியாழக்கிழமை அன்று தளர்த்தி, அந்தநேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"*

*என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.*

*(தி.மு.க. உறுப்பினர்கள் எழுந்து சென்றனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *என்ன? உட்காருங்கள். அதற்குள் வெளிநடப்பா? (சிரிப்பு) மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க.*

*மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.*

*மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.*

*நாளை 29-9-2005 அன்று வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.*

*பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவுற்றன. பேரவை மீண்டும் நாளை (29-9-2005) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.*

*பின்னர், பேரவை பிற்பகல் 2-25 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்